

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை, செங்கல்பட்டு, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த 6 திருக்கோயில்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்புகளில் 16 அர்ச்சகர்கள் மற்றும் 31 பணியாளர்களுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை, செங்கல்பட்டு, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த 6 திருக்கோயில்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்புகளில் 16 அர்ச்சகர்கள் மற்றும் 31 பணியாளர்களுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

### சென்னை குடிநீர் வாரியத்தில் பணி நியமனம் செய்யப்பட்ட

# உதவிப் பொறியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு நிறைவு விழா!

## அமைச்சர் கே.என்.நேரு சான்றிதழ்கள் வழங்கினார்!



சென்னை, நவ. 14 -

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் / சென்னை குடிநீர் வாரியத்தின் தலைவர் கே.என். நேரு அவர்கள், சென்னை குடிநீர் வாரியத்தில் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள உதவி பொறியாளர்களுக்கான பயிற்சி வகுப்பின் நிறைவு விழாவில் சான்றிதழ்களை நேற்று முன்தினம் (12.11.2025) சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் வழங்கினார்.

இக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பேசியதாவது:

சென்னை மாநகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது 2021 ஆண்டு வரை நாளொன்றுக்கு 850 MLD வழங்கப்பட்டு வந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் பேரில் பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டதன் அடிப்படையில் தற்போது நாளொன்றுக்கு 1300 MLD வழங்கப்பட்டு வருகிறது. பொது மக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்றான குடிநீர் வழங்குதலில், எவ்வித தடையுமின்றி சீரான விநியோகம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் முறையாக வழங்குவதன் மூலமும், கழிவுநீர் அகற்றுதலில் உரிய தொழில்நுட்பங்களை கொண்டு பணிகளைமேற்கொள்ளுவதால் பொது மக்களுக்கு பாதுகாப்பான சூழல் ஏற்படுத்திட முடியும்.

சென்னை குடிநீர் வாரியத்தில் புதிதாக பணியமர்த்தப்பட்ட 133 உதவி பொறியாளர்களுக்கு வாழ்த்து க்கள் தெரிவித்து கொள்கிறேன். நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர், சாலைகள் வசதி, மழைநீர் வடிகால்கள், மின்வசதி போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிருவாகத் துறை என்பது மக்களுடன் நேரடி தொடர்பில் இருக்கும் ஒரு முக்கிய துறையாகும். இத்துறையில் பணியாற்ற கூடிய அனைத்து நிலை அலுவலர்களும் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து பணியாற்றிட வேண்டும் அதற்காக தான் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது.

சென்னை குடிநீர் வாரியத்தில் புதிதாக பணியமர்த்தப்பட்ட 133 உதவி பொறியாளர்களுக்கு, சென்னை குடிநீர் வாரிய பயிற்சி மையத்தில் 2 குழுக்களாக பிரிக்கப்பட்டு, அவர்களுக்கான அடிப்படை பயிற்சிகள் 2 வாரங்கள் அளிக்கப்பட்டது. மேலும், சென்னை குடிநீர் வாரியத்தின் பல்வேறு செயல்பாடுகள் குறித்த நேரடி களப்பயணங்கள் 2 வாரங்கள் மேற்கொள்ளப்பட்டது.

முதல் குழுவிலுள்ள (Batch -I) உதவி பொறியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் 04.09.2025 முதல் 19.09.2025 வரை நடைபெற்றது. பல்வேறு செயல்பாடுகள் குறித்த நேரடி களப்பயணங்கள் 22.09.2025 முதல் 10.10.2025 வரை மேற்கொள்ளப்பட்டது. இதே போல் இரண்டாவது குழுவிலுள்ள (Batch -II) உதவி பொறியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் 22.09.2025 முதல் 07.10.2025 வரை நடைபெற்றது. பல்வேறு செயல்பாடுகள் குறித்த நேரடி களப்பயணங்கள் 08.10.2025 முதல் 24.10.2025 வரை மேற்கொள்ளப்பட்டது.

பயிற்சி வகுப்புகள் மட்டுமின்றி வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து உதவி பொறியாளர்கள் களப்பணியில் அறிந்து கொள்ளும் வகையில் நீர் ஆதாரங்கள் (Water Resources), நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (Water Treatment Plants), தர உறுதி ஆய்வகம் (Quality Assurance Lab), கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (Sewage Treatment Plants), கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்கள் (Desalination Plants), குடிநீர் மற்றும் கழிவுநீர் திட்டப்பணிகள் நடைபெறும் இடங்கள் (Project sites), சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்திலுள்ள புவிசார் தகவல் அமைப்பு பயன்பாட்டு மையம் (GIS Application Centre), கண்காணிப்பு & கட்டுப்பாட்டு மையம் (Monitoring & Control Centre) மற்றும் பகுதி அலுவலகங்களில் நடைபெறும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு (Operation & Maintenance) பணிகளை நேரில் பார்வையிட்டனர், மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினை (ICCC) நேரில் சென்று பார்வையிட்டு அதனுடைய செயல்பாடுகளை கேட்டறிந்துள்ளீர்கள்.

அலுவல் ரீதியான கோப்புகளை எப்படி கையாளுவது, நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தினசரி மேற்கொள்ளப்படும் அன்றாட பணிகளோடு பொது மக்களின் தேவைகளை உடனுக்குடன் சரிசெய்வதற்கான வழிவகைகளை மேற்கொள்வது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. தங்களுக்கு வழங்கப்படும் பொறுப்புகளை திறம்பட மேற்கொள்ள வேண்டும்

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

இந்நிகழ்வில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுரு பரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிர்வாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., பொறியியல் இயக்குநர் (பொ) திருமதி. ஓ.பர்வீஸ், இயக்குநர் (பயிற்சி மையம்) திருமதி.பி.சி. வள்ளி, துணை இயக்குநர் (பயிற்சி மையம்) திருமதி.ம.ஸ்ரீதேவி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற ஒன்றிய பேரூர் நகரம் ஆலோசனைக் கூட்டத்தில் கரூர் மாவட்டச் செயலாளரும் மேற்கு மண்டல பொறுப்பாளருமான வி. செந்தில் பாலாஜி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் நாமக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் மற்றும் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு இயல் - இசை - நாடக மன்றம் சார்பில்

# நூலாசிரியர் பாட்டழகனுக்கு ரூ.2 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ.14-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்று 11.11.2025 தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்கு பொற்கிழியாக தலா 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க 5 நூலாசிரியர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் புதிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்ய 5 நாடகக் கலைஞர்களுக்கு தலா 1.50 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் புதிய நாட்டிய நாடகங்களை தயாரித்து மேடையேற்றம் செய்ய 5 நாட்டியக் கலைஞர்களுக்கு தலா 1.50 இலட்சம் ரூபாய் நிதியுதவி மற்றும் 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக்கருவிகள் மற்றும் ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கு தலா 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி, என மொத்தம் 85 இலட்சம் ரூபாய்க்கான நிதியுதவிகளை 525 கலைஞர்களுக்கு வழங்கினார்.

மேலும் தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க முனைவர் மோ. பாட்டழகன், முனைவர் கி. அய்யப்பன், முனைவர் ஜே. ஆர். லட்சுமி, முனைவர் க. வெங்கடேசன், முனைவர் சித்ரா கோபிநாத் ஆகிய 5 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 2 நூலாசிரியர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அதன்படி நூலாசிரியர் மோ. பாட்டழகன் முதல்வரிடமிருந்து ரூ.2 லட்சத்துக்கான காசோலையை பெற்றுக் கொண்டார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.11.2025) சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற 23 வது ஆசிய மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன்ஷிப் 2025 போட்டியில் வெற்றி பெற்ற மாஸ்டர்ஸ் தடகள வீரர்கள் சந்தித்து குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.




தி.மு.க.
இளைஞர் அணி

புதிய நிர்வாகிகளுக்கான
2026 தேர்தல் பணி பயிற்சி பாசறைக் கூட்டம்

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. மண்டலம்–1, சென்னை வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட இராயபுரம் கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதி, பெரம்பூர் வடக்குப் பகுதி, தெற்குப் பகுதி, ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி மற்றும் மேற்குப் பகுதி ஆகிய பகுதிகளில் பயிற்சிப் பாசறைக் கூட்டம் கீழ்க்காணும் தேதிகளில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | பகுதி | இடம் |
|---|---|---|---|
| 15.11.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | இராயபுரம் கிழக்குப் பகுதி | மைனா பார்ட்டி ஹால், ஜி.ஏ.சாலை, பழைய வண்ணாரப்பேட்டை. |
| 16.11.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | பெரம்பூர் வடக்குப் பகுதி | இராமசாமி திருமண மண்டபம், முத்துக்குமாரசாமி கல்லூரி எதிரில், கொடுங்கையூர். |
| | மாலை 5.00 மணி | ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி | செல்வ வாணி மஹால், மணிக்கூண்டு அருகில், தண்டையார்பேட்டை. |
| 22.11.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | பெரம்பூர் தெற்குப் பகுதி | சீலம் மஹால், எத்திராஜ் சாமி சாலை, கொடுங்கையூர். |
| 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | ஆர்.கே.நகர் மேற்குப் பகுதி | மரியம் மாளிகை, எண்ணூர் நெடுஞ்சாலை, கொருக்குப்பேட்டை |
| | மாலை 5.00 மணி | இராயபுரம் மேற்குப் பகுதி | ஸ்ரீபேலஸ் திருமண மண்டபம், சூரிய நாராயண தெரு, இராயபுரம் |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12.11.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி